கி.வீரமணி – கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. சிறப்புரை!

ஜப்பானில் மையம் கொள்ளும் பெரியார்! கடல் கடந்து பரவும் திராவிடம்!

“எப்போதும் பேசுகின்ற ஏதென்ஸ் நகர் சாக்ரடீஸாய்-ஏன் என்று கேட்பதிலே வைர நெஞ்ச வால்டேராய்-இறைவனுக்கே மறுப்புச் சொன்ன இங்கர்சாலாய் எம் தந்தை பெரியாரும் வாழ்ந்திட்டார்” - என்று தந்தைப் பெரியார் பற்றி கவிதைப் பாடியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். உலகச் சிந்தனையாளர்கள் வரிசையில் பகுத்தறிவுப் பகலவன் பெரியாரின் பணி உயர்வானது.

கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகரில் உள்ள சாக்ரடீஸ் சிலையைப் பெரியார் தன் ஐரோப்பிய பயணத்தின் போது கண்டார். இங்கிலாந்து, ஜெர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கும் மிகப் பெரிய வல்லரசாக விளங்கிய சோவியத் யூனியனுக்கும் பெரியார் மேற்கொண்ட பயணம் அவருடைய பொதுவாழ்வில் மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி, தமிழ்நாட்டின் சமுதாய மறுமலர்ச்சிக்கும் துணை நின்றது.

பெரியார் நடத்திய பெரும் புரட்சியையும் அதனால் தமிழ்நாட்டில் ஏற்பட்ட சமுதாய மாற்றங்களையும் எப்போதும் போற்றுகின்ற இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம். பெரியார் மறைந்தபோது அவருக்கு முழு அரசு மரியாதை வழங்கி, இறுதி ஊர்வலம் நடைபெறச் செய்தவர் அப்போது முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர். பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றும் வகையில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராவதற்கான சட்டத்தை நிறைவேற்றினார் கலைஞர். திராவிட மாடல் ஆட்சியில் அனைத்து சாதி அர்ச்சகர்களுக்கும் பணியாணை வழங்கியவர் திராவிட நாயகர்-கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். பெரியாரின் பிறந்தநாளான செப்டம்பர் 17ஆம் நாளை சமூக நீதி நாளாக அரசாணை வெளியிட்டவர் திராவிட மாடல் அரசின் முதலமைச்சர்.

2026 செப்டம்பர் 17ஆம் நாள் தி.மு.க.வின் தலைமை நிலையமான அண்ணா அறிவாலயத்தில் கழக நிர்வாகிகள் சமூக நீதி நாள் உறுதிமொழியைக் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் ஏற்றனர். காய்ச்சலால் உடல்நலன் பாதிக்கப்பட்டிருந்ததையும் பொருட்படுத்தாமல் பெரியார் பணி முடிக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு உறுதிமொழியேற்றார் கழகத் தலைவர் அவர்கள்.

பெரியாரின் 148ஆம் பிறந்த நாளையொட்டி, தாயக் கழகமான திராவிடர் கழகம் சார்பில் தமிழ்நாடு முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் பெரியார் நடை எனும் பகுத்தறிவு விழிப்புணர்வுப் பேரணிகள் நடைபெற்றன. செப்டம்பர் 19ஆம் நாள் தஞ்சாவூரில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் பெரியார் நடையைத் தொடங்கி வைத்தபோது, தி.மு.க. நிர்வாகிகள் பலரும் அதில் பங்கேற்று, கொள்கை உறுதியினை வெளிப்படுத்தினர்.

திராவிட மாதமான செப்டம்பர் மாதம் முழுவதும் பல மாவட்டங்களில் நடந்த பெரியார் நடையிலும், அக்டோபர் 4 அன்று சென்னையில் நடந்த பெரியார் மாரத்தானிலும், தி.மு.கழக நிர்வாகிகளான இளந்தலைமுறை திராவிடச் சிந்தனையாளர்களான ஜென்ஸீ தி.மு.க.வினர் அதிகளவில் பங்கேற்றனர். மாவட்டங்கள் தோறும் கொள்கைக் குடும்பங்கள் சந்திக்கும் விழாவும் பெரியாரின் 148ஆம் பிறந்த நாளை யொட்டிச் சிறப்பாக நடைபெற்றன.

தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்குமே பெரியார் இன்று சொந்தமாகிவிட்டார். டெல்லிப் பல்கலைக்கழக மாணவர்களும், கொல்கத்தா இளைஞர்களும், மும்பை இளந்தலைமுறையும் பெரியாரின் படங்களுடன் ஊர்வலம் போவதைக் காண முடிகிறது. இதன் அடுத்த பாய்ச்சலாக, ‘பெரியாரை உலகமயமாக்குவோம். உலகைப் பெரியார் மயமாக்குவோம்’ என்ற இலட்சிய முழக்கத்துடன் ஆசிரியர் அய்யா அவர்கள் முன்னெடுத்து வரும் செயல்பாடுகள் பரவலானத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட உலகின் பல பகுதிகளிலும் பெரியார்க் கொள்கைகளையும் திராவிட இயக்கத்தின் பங்களிப்பையும்



கோவி.லெனின்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

விளக்கும் கருத்தரங்குகள்-புத்தக வெளியீடுகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. திராவிட மாடல் ஆட்சியில் 2025ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் நாள் இங்கிலாந்தில் உள்ள புகழ்மிக்க ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் செயிண்ட் ஆண்டனி கல்லூரியில் பெரியாரின் உருவப்படத்தைத் திராவிட மாடல் ஆட்சியின் முதல்வரான கழகத் தலைவர் அவர்கள் திறந்து வைத்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வு நடைபெற்றது.

உலகம் முழுவதும் பெரியாரும் திராவிடமும் கொண்டாடப்படும் நிலையில், இந்த ஆண்டு ஜப்பான் நாட்டில் பெருமைமிகு நிகழ்வு நடைபெறுகிறது. BRIDGE 2026 எனும் 5ஆம்- பெரியார் பன்னாட்டு மனித நேய மாநாடு அக்டோபர் 11, 12 ஆகிய நாட்களில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் கொண்டாடப்படுகிறது. வெளிநாடுவாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம் ஒருங்கிணைக்கும் இந்த விழாவில், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களுடன், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு அரசின் திட்டக்குழு முன்னாள் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன், திராவிடர் கழகப் பரப்புரைச் செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி, தி.மு.க தகவல்தொழில்நுட்ப அணிச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, பெரியார் பன்னாட்டு அமைப்பின் தலைவர் டாக்டர் சோம.இளங்கோவன், திராவிடர் கழகத் துணைப் பொதுச்செயலாளர் பிரின்ஸ் என்னரசு பெரியார், பொருளாதார வல்லுநர் டாக்டர் விஜயபாஸ்கர், திராவிட இயக்க ஆய்வாளர் விக்னேஷ் ராஜாமணி, மனித உரிமை எழுத்தாளர் முத்துகிருஷ்ணன் உள்ளிட்டோருடன் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் இந்த இருநாள் மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

டோக்கியோ மனித உரிமைச் சங்கத்தின் தலைவரும் ஜப்பானில் உள்ள தூய்மைப் பணியாளர்களின் நலன் காப்பவருமான கோரோ ஒஷிதா, டாக்டர் ஃபுகாஓ ஜூனிச்சி ஆகியோர் இதில் பங்கேற்பவர்களில் முக்கியமானவர்கள். மேலும் அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, டான்சானியா நாடுகளிலிருந்தும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் பெரியார் பன்னாட்டு மனிதநேயர்களின் ஐந்தாம் மாநாட்டில் கலந்துகொள்கின்றனர்.

பெரியாரின் வாழ்க்கையையும் அவரது தொண்டினையும் ஜப்பான் மொழியில் வெளியிட்டவர்களான திராவிட இயக்க உணர்வாளர்கள் டோக்கியோ செந்தில், கமலக்கண்ணன் ஆகியோரும் ஜப்பான் வாழ் தமிழர்களான குன்றாளன், கணேஷ் ஏழுமலை உள்ளிட்ட பலரும் மாநாட்டுப் பணிகளைப் பல மாதங்களாகத் திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றனர்.

ஜப்பான் நாடு பழமையானப் பண்பாட்டைக் கொண்டது. தாய்மொழிக்கு முன்னுரிமைத் தருவது. அறிவியல்-தொழில்நுட்ப வளர்ச்சியில் சிறந்து விளங்குகிறது. திராவிடம் என்பது மொழி-இன உரிமைகளுடன் சமூக நீதிக் கொள்கைகையைப் பரப்பி, பகுத்தறிவுக் கண்ணோட்டத்துடன் சிந்திக்கச் செய்கின்ற இயக்கம். ஜப்பான் மண்ணில் பெரியாரையும் திராவிடத்தையும் முன்னிறுத்தி நடைபெறும் மாநாடு இயக்க வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும்.

இந்த மாபெரும் திராவிட நிகழ்விற்கு - ஜப்பானின் வெளிநாடுவாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் ரா.செந்தில்குமார், வி.குன்றாளன், ச.கமலக்கண்ணன், அ.கோவிந்தபாசம் ஆகியோர் நாற்பதுக்கும் மேற்பட்ட ஜப்பான்வாழ் திராவிட உணர்வாளர்கள் உதவியுடன் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள்.

தஞ்சை ரயில் நிலையத்தில் இந்தித் திணிப்பைக் கண்டித்து

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. வினர் ஆர்ப்பாட்டம்!

துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., ச.முரசொலி எம்.பி. தலையீட்டால் பெயர்ப் பலகை அகற்றம்!

தஞ்சாவூர், அக்.10–

தஞ்சாவூர் ரயில் நிலையம் அம்ரீத் பாரத் திட்டத்தின் கீழ் ரூ.27.17 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு தஞ்சை ரயில் நிலையத்தில் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழகத்தின் மிகவும் பழமை வாய்ந்த ரயில் நிலையங்களில் தஞ்சை ரயில் நிலையமும் ஒன்றாகும். தென்னக ரயில்வேயின் திருச்சி கோட்டத்திற்கு உட்பட்டது.

தற்போது தஞ்சை வழியாக சென்னை, ராமேஸ்வரம், திருப்பதி, வாரணாசி, பெங்களூரு, புதுச்சேரி, திருச்செந்தூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, கோவை, செங்கோட்டை போன்ற இடங்களுக்கு எக்ஸ்பிரஸ் ரயில்களும், தஞ்சையில் இருந்தும், தஞ்சை வழியாகவும் மயிலாடுதுறை, திருச்சி, நாகை, நாகூர், காரைக்கால், வேளாங்கண்ணி போன்ற இடங்களுக்கு எக்ஸ்பிரஸ் ரயில்களும் இயக்கப்பட்டு வருகின்றன. தஞ்சை ரயில் நிலையத்தில் 5 நடைமேடைகளும், 7 ரயில்வே பாதைகளும் உள்ளன. நாள்தோறும் ஏராளமான எக்ஸ்பிரஸ் ரயில்கள் இயக்கப்படுவதால் தஞ்சை ரயில் நிலையம் எப்போதும் பரபரப்புடன் காணப்படும்.

நாட்டின் பெரிய, சிறிய நகரங்களில் உள்ள ரயில் நிலையங்களை மறுசீரமைப்பு செய்ய ரயில்வே அமைச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளது. அம்ரீத் பாரத் ரயில் நிலைய திட்டத்தின் கீழ் தெற்கு ரயில்வேயில் 90 ரயில் நிலையங்களை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் பயணிகள் காத்திருப்போர் அறைகள் மேம்படுத்தப்படும். ரயில் நிலையத்தில் சிற்றுண்டிக் கடைகள் அல்லது சிறிய கடைகள் அமைக்கப்படும். ஒரு ரயில் நிலையத்தில் ஒரு நிலையம் ஒரு தயாரிப்பு திட்டத்தின் கீழ் குறைந்த பட்சம் 2 கடைகள் திறக்கப்படும். ரயில் நிலையத்தின் முக்கிய இடங்களில் ரயில் வருகை, புறப்பாடு உள்ளிட்ட விவரங் களை காட்சிப்படுத்தும் பலகைகள் பொருத்தப்படும். மேலும் பயணிகளை கவரும் வகையில் இயற்கை காட்சிகள், செடிகள், மரக் கன்றுகள் உருவாக்கப்படும். அனைத்துப் பகுதிகளிலும் 600 மீட்டர் நீளம் கொண்ட உயர்நிலை நடைபாலம் அமைக்கப்பட்டு வருகிறது. தஞ்சை ரயில் நிலையத்தில் 2 நுழைவாயில்கள் உள்ளது. அதில் ஒரு நுழைவாயிலில் முகப்பு தோற்றம் வடமாநிலத்தில் உள்ள கோவில்கள் போல் அமைக்கப்பட்டுள்ளது. மற்றொரு நுழைவாயில் பல்வேறு போராட்டங்களுக்குப் பின்பு தஞ்சை பெரிய கோவில் போல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அதன் கீழே ஹிந்தி எழுத்துப் பலகை மிகப்பெரிய அளவில் வைக்கப்பட்டது. இதற்கு தி.மு.க, உள்ளிட்ட பல்வேறு கட்சி, இயக்கம், அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

ஹிந்தி பெயர் பலகை அகற்றக்கோரி நேற்று காலை தஞ்சாவூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. இதற்காக மத்திய மாவட்ட தி.மு.க செயலாளர் துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் முரசொலி எம்.பி., முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் டி.கே.ஜி. நீலமேகம், ராமச்சந்திரன், மகேஷ் கிருஷ்ணசாமி , தலைமை செயற்குழு உறுப்பினர் செல்வம்,மாநகர செயலாளர் சண். ராமநாதன், மேயர் அஞ்சுகம் பூபதி

உள்ளிட்ட ஏராளமான திமுக நிர்வாகிகள் ரயில் நிலையம் முன்பாக திரண்டனர். இந்நிலையில் ரயில்வே துறை அதிகாரிகள் ஹிந்தி பெயர் பலகையை அகற்றி அங்கு தமிழ் பெயர் பலகையை பொருத்தும் நடவடிக்கையில் இறங்கினர். இதன் காரணமாக தி.மு.க.வினரின் ஆர்ப்பாட்டம் ரத்து செய்யப்பட்டது.

இது குறித்து மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அளித்த பேட்டியில் கூறியதாவது:

த.வெ.க அரசு பொறுப்பேற்ற பிறகு ஹிந்தி மொழிக்கு முன்னுரிமை அளிக்கும் போக்கு அதிகரித்துள்ளது. தஞ்சாவூர் ரயில் நிலையத்தில் பெரிய அளவில் ஹிந்தி மொழி பெயர்ப் பலகை வைக்கப்பட்டதைக் கண்டித்து தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்த இருந்த நிலையில் பெயர் பலகை அகற்றப்பட்டது. தமிழ் மொழியை பின்னுக்கு தள்ளிவிட்டு ஹிந்தி மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலை நீடித்தால் போராட்டத்தை தீவிரப்படுத்துவோம். உடனடியாக தஞ்சாவூர் சந்திப்பு என்பதைக் குறிக்கும் விதமாக தமிழ் மொழியில் பெரிய அளவில் பெயர் பலகை வைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.



நாகை மாவட்டம் நாகை நகரக் கழக முன்னாள் செயலாளர் ஆர்.ஏ.வீராசாமி 6ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருஉருவப் படத்திற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர், என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், நாகை நகர கழக செயலாளர் இரா.மாரிமுத்து, மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் இரா.முருகையன், ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, எஸ்.பால்ராஜ், ஆர்.ஆர். குலோத்துங்கன், இரா.தங்கதுரை, விமல்மொக்கை, அய்யாவு கணேசன், எஸ்.எம்.ஏ.கணேசன், நிஜாம் நாகை நகர நிர்வாகிகள் ஆர்.ரமணி, பி. திலகர், வெற்றிலைகடை எஸ்.சிவா, அபுபக்கர், மற்றும் நிர்வாகிகள் வழக்கறிஞர் செல்வராஜ், முகுந்தன், ஆர்.எஸ்.சத்தியன், மு.க. சோமு, ‘மு.க.ஜீவா, பாபு, பரமு, முத்து உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

திருவைகுண்டம் எம்.எல்.ஏ. சரவணன்

த.வெ.க.வில் பதவி வாங்கித் தருவதாகக் கூறி பண மோசடி!

தூத்துக்குடி,அக்.10-

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற தொகுதி தமிழக வெற்றி கழக உறுப்பினர் சரவணன். இவரது சொந்த ஊர் தூத்துக்குடி மாவட்டம் ஏரல் அருகே உள்ள அம்பாள் தோப்பு என்ற கிராமமாகும்.

இவர் கர்நாடகா மற்றும் கேரளா மாநிலங்களில் லாட்டரி சீட்டு வியாபாரம் செய்து வருகிறார். லாட்டரி சீட்டு வியாபார தொடர்பின் மூலமாகவே தமிழக வெற்றி கழகத்தில் இணைந்ததாக கூறப்படுகிறது.

இவர் சட்டமன்ற உறுப்பினராக பிறகு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் ஆய்வு என்ற பெயரில் அட்ராசிட்டி செய்து ரீல்ஸ் வெளியிடுவதுதான் இவரது பணியாக இருந்து வருகிறது.

மேலும் ஆழ்வார்திருநகரியை சேர்ந்த தமிழக வெற்றி கழக நிர்வாகி இசக்கியம்மாள் என்பவரை ராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடிக்கு அழைத்து சென்று பாலியல் துன்புறுத்தல் செய்த வழக்கில் சட்டமன்ற உறுப்பினர் சரவணன் தூண்டுதல் பெயர்தான் இந்த சம்பவம் நடைபெற்றதாக அந்தப் பெண் புகார் அளித்திருந்தார். இது தமிழகம் முழுதும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் தற்போது அந்தப் பெண்ணைக் கொண்டே அந்த வழக்கை திரும்பப் பெற வைத்துள்ளனர்.

தற்போது ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர் பதவி வாங்கி தருவதாக அவரது நண்பரிடம் 60 ஆயிரம் ரூபாய் மோசடி செய்ததாகவும் புகார் ஒன்றும் தற்போது எழுந்துள்ளது.

தேர்தலுக்கு முன்பாக ஏரல் பகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி வழக்கறிஞர் ஒருவரை அவதூறாக பேசியதாக ஒரு வழக்கு ஒன்றும் ஏரல் காவல் நிலையத்தில் இருந்து வந்துள்ளது.

ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகத்தில் ஆய்வு என்ற பெயரில் சர்ச்சையில் சிக்கியது.

ஏரல் மருத்துவமனையில் நள்ளிரவில் ஆய்வு செய்து மருத்துவ சங்கங்களில் கண்டனத்தை பெற்றது.

சட்டமன்ற உறுப்பினர் சரவணன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள பல்வேறு இடங்களில் ஆய்வு நடத்தி சர்ச்சையில் சிக்கி வருவது குறிப்பிடத்தக்கது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

விளநகர் எஸ். கணேசன்
அக்டோபர் 10 (1987)



மாணவர் பருவத்திலிருந்து திராவிடர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு, பின்னர் கழகம் துவக்கப்பட்ட காலத்திலிருந்து பணியாற்றியவர்.

அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் அன்புக்கு உரியவராக விளங்கியவர்.

தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக தொகுதி மக்களுக்கு பணியாற்றியவர்.

செம்பனார்கோயில் ஒன்றிய பெருந்தலைவராகவும் – கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

விலைவாசி உயர்வு இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.